ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2187/18 - 2020 අගෝස්තු මස 05 වැනි බදාදා - 2020.08.05
2187/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVWE/LND/ACQUI/05/08.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2016/LO/175.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில், கோனவ கிராமத்தில் அமைந்துள்ள, ஆ. வ. கு. 2451 இன் துண்டு இல. 01 இன் விபரம் :

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : ஷான்னா பிரட்ஜட் வத்தை; விபரம் : வீட்டுத் தோட்டம், சுமார் 45 - 50 வருட வயதிலான புளி மரங்கள் 3, சுமார் 25 - 40 வருட வயதிலான தென்னை மரங்கள் 22, சுமார் 15 - 25 வருட வயதிலான தென்னை மரங்கள் 20, சுமார் 15 - 25 வருட வயதிலான மா மரங்கள் 05, சுமார் 15 - 20 வருட வயதிலான பலா மரங்கள் 03, சுமார் 10 - 25 வருட வயதிலான தேக்கு மரங்கள் 05, சுமார் 08 - 15 வருட வயதிலான மா மரங்கள் 06, கலப்பு பயிர்ச் செய்கை, நிலையான கட்டிடங்கள் 09, தற்காலிகக் கட்டிடங்கள் 02, தண்ணீர் தாங்கி, குழாய்க் கிணறு மற்றும் சீமெந்தால் கட்டப்பட்ட கிணறு காணப்படுகின்றன; உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக் குழு; விஸ்தீரணம் : 0.7944 ஹெக்டயார் (1 ஏக் 3 ரூட் 34.1 பேர்ச்).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வீரம்புகெதர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எஸ். பீ. ஏகநாயக்க,
பிரதேச செயலாளர்,
வீரம்புகெதர.

பிரதேச செயலகம்,
வீரம்புகெதர,
2020, யூலை 31.

8 - 460

1A - G 32628 - 27 (2020/08)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: WEG/LAN/L9/ACQ/48-18.

மேலே குறித்த தலைப்பின் கீழ் 1948/57 ஆம் இலக்க மற்றும் 2016, சனவரி 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு கவனத்தைச் செலுத்தி குறித்த அறிவித்தலில் துண்டு இல. 18 இன் விஸ்தீரணம் சுமார் 0.0011 ஹெக்டயார் என குறித்திருந்தபடியால்,

அவ்வறிவித்தலின் காணியின் விஸ்தீரணம் சுமார் 0.0002 ஹெக்டயார் ஆக திருத்தப்பட்டுள்ளதென இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

கே. பீ. ஜீ. சுமித் சான்த,
பிரதேச செயலாளர்,
வெலிகாமம்.

பிரதேச செயலகம்,
வெலிகாமம்,
2020, யூலை 23.

8 - 461